ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1971/12 - 2016 ජුනි මස 15 වැනි බදාදා - 2016.06.15
*1971/12 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதி புதன்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்*

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம்* இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு, பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகிய நான், அட்டவணையின் நிரல் I இல் குறிப்பிடப்பட்ட பகுதிகள் அதன் நேரொத்த பகுதியின் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லைகளையும் வரையரைகளையும் கொண்டுள்ளதுமான இடப்பகுதி, அபிவிருத்திக்கு பொருத்தமானதென அபிப்பிராயப்படுவதனால், அப்பகுதியினை நகர அபிவிருத்திப் பகுதியாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.

பாட்டலி சம்பிக்க ரணவக்க (பா. உ.)
பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சர்.

பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சு,
17 ஆவது மாடி, "சுஹூறுபாய"
சுபுதிபுர வீதி,
பத்தரமுல்லை,
2016, யூன் 09.

**அட்டவணை I**

அம்பலாந்தோட்டை பிரதேச சபை

*நிரல் I*

தென் மாகாணம், அம்பாந்தோட்டை மாவட்டத்திலான அம்பலாந்தோட்டை பிரதேச சபையினுள் அமைந்துள்ளதும், நிரல் II இல் குறித்துரைக்கப்பட்டவாறு எல்லையும் வரையரைகளாலும் சூழப்பட்ட பகுதியுடன்; வர்த்தமான பத்திரிகை (அதி விசேடம்) இல. 223/16 இல் இலங்கை கரையோர வலயம், இல. 74/7 , மாத்தறை கதிர்காமம் புகையிரதப் பாதை வலயம் மற்றும் அபிவிருத்தி வலயங்களாக இல. 1090/5 அத்துடன் இல. 1605/41 கீழ் ; முறையே 17.12. 1982, 29.12.1992, 26.07. 1999 மற்றும் 11.06.2009 ஆகிய திகதிகளில் ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளும் அடங்கும்.

*நிரல் II*

வடக்கு :
படலங்கல கி. சே. பி. இனது தெற்கு எல்லையும், டிக்வேவா கி. சே. பி. இனது கிழக்கு எல்லையும் சந்திக்கும் புள்ளியிலிருந்து எம்பிலிப்பிட்டி பிரதேச செயலக பிரிவினது தெற்கு எல்லையோரமாக கிழக்கேயும், தென்கிழக்கேயும், வடகிழக்கேயும் மற்றும் தென்கிழக்கேயுமாக கீறப்பட்ட கோடானது சூரியவேவா பிரதேச செயலகப் பிரிவின் மேற்கு எல்லையினை அடையும் வரை.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

அம்பலாந்தோட்டை பிரதேச சபை

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| | *கிழக்கு :* |
| | கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து சூரியவேவா பிரதேச செயலக பிரிவின் மேற்கு எல்லையோரமாக ; தென்கிழக்கேயும், தென்மேற்கேயும், தெற்கேயும், தென்கிழக்கேயும், தெற்கேயும், தென்மேற்கேயும், தென்கிழக்கேயும், மேலும் அம்பாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவின் மேற்கு எல்லையோரமாக தென் கிழக்கேயும், தென்மேற்கேயும், தென்கிழக்கேயும், தெற்கேயும், தென்கிழக்கேயும், தென்மேற்கேயும், அத்துடன் தென்கிழக்கேயும், கீறப்பட்ட கோடானது இந்து சமுத்திரத்தின் உயர் வெள்ள மட்டத்தினை அடையும் வரை. |
| | தெற்கு :- |
| | கடைசியாக குறிப்பிட்ட புள்ளியிலிருந்து இந்து சமுத்திரத்தின் உயர் வெள்ள மட்டக்கோட்டோரமாக ; மேற்கேயும், தென்மேற்கேயும், வடமேற்கேயும், தென்மேற்கேயும், வடகிழக்கேயும், வடமேற்கேயும், தென்மேற்கேயும், மேற்கேயும், தென்மேற்கேயுமாக கீறப்பட்ட கோடானது, தங்காலை பிரதேச செயலகப் பிரிவின் கிழக்கு எல்லையினை அடையும் வரை. |
| | மேற்கு :- |
| | கடைசியாக குறிப்பிட்ட புள்ளியிலிருந்து வடமேற்கே தங்காலை பிரதேச செயலகப் பிரிவின் கிழக்கு எல்லையோரமாகவும், பின்பு, வடமேற்கேயும் வடக்கேயும், வடகிழக்கேயும், வடமேற்கேயும் வட கிழக்கேயும், வடமேற்கேயும், வடகிழக்கேயும், வடமேற்கேயும், வடகிழக்கேயும் அங்குனகொல பலஸ்ச பிரதேச செயலகப் பிரிவின் கிழக்கு எல்லையோரமாக கீறப்பட்ட கோடானது தொடக்கப் புள்ளியினை அடையும் வரை. |

7- 95

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.